2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : **கட்டிடங்கள் திணைக்களம்**
செலவினத் தலைப்பு இல. : 309

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு..... 2

1.1 அறிமுகம்..... 2
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்..... 6
1.3 பிரதான செயற்பாடுகள்..... 10
1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்..... 11
1.5 அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை இன் கீழ் வருகின்ற நிறுவனங்கள்/நிதிகள்.....12

அத்தியாயம் 02 – செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 13

2.1 கடந்தகால செயலாற்றல் 2023 வரை.....13
2.2 2023 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்களின் சுருக்கம்..... 16
2.3 ஆலோசனைப் பிரிவின் செயலாற்றல்.....17
2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றுறுதிப்படுத்தல்..... 18

அத்தியாயம் 03 – 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றல்..19

3.1 நிதி செயலாற்றல் கூற்று..... 19
3.2 நிதி நிலைமை கூற்று..... 20
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று..... 21
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்..... 22
1. அறிக்கையிடல் காலம்..... 22
2. அளவீட்டின் அடிப்படை..... 22
3. வருமான அங்கீகாரம்.....22
4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PP&E) அங்கீகாரம் மற்றும் அளவீடு..... 22
5. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்..... 22
6. காசு மற்றும் காசுக்கு சமமானவை..... 22
3.5 வருமான சேகரிப்பின் செயலாற்றல்..... 23
3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றல்..... 23
3.6அ நி.பி. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவர் என்ற வகையில் மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கு செலவிடுவதற்காக இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்..... 24
3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்..... 25
3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை **..... 26

அத்தியாயம் 04 – செயலாற்றல் குறிகாட்டிகள்..... 36
அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதலின் செயலாற்றல்... 37
அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு..... 38

6.1 ஆளணி முகாமைத்துவம்..... 38
6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை பாதித்துள்ளமையை சுருக்கமாகக் குறிப்பிடுதல்..... 39
6.3 மனித வள அபிவிருத்தி..... 40

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை..... 42

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

பொதுப் பணிகள் திணைக்களத்தின் (PWD) கீழ் செயல்பட்டிருந்த கட்டிடத் திணைக்களம் (DOB) 1969 இல் நிறுவப்பட்டதுடன் கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குப் பொறுப்பான ஒரு சுயாதீன நிறுவனமாக 5 தசாப்தங்களாக இயங்கி வருகின்றது. இந்த திணைக்களமானது கட்டிடம் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்புப் பணிகளில் செயற்படுகின்ற ஒரேயொரு அதிகாரம் மற்றும் ஆலோசனை நிறுவனமாக காணப்படுகின்றது. கட்டிட நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கட்டிட நிகழ்ச்சித் திட்டங்களின் எந்தவொரு கடப்பாடும் பற்றிய நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கான ஓர் நிறுவனமாக இது அழைக்கப்பட்டது.

திணைக்களத்தின் பணிகள் நிதி பிரமாணங்கள், திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய அபிவிருத்தியிலும், பொது கட்டிட சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் இத்திணைக்களம் பாராட்டத்தக்க பங்கை வகிக்கின்றது.

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்துடன் இத்திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டது. இலங்கையில் பொது கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான அதிகாரமும் பொறுப்பும் இத்திணைக்களத்திற்கு உள்ளது. திணைக்களமானது செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கூறல் பற்றிய அதன் பங்கை மீளவரையறை செய்துள்ளது.

பெயர்	-	கட்டிடங்கள் திணைக்களம்
சட்ட ரீதியான தகுதி	-	அரசுக்கு முழு உரிமையுடையது
அமைச்சு	-	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
அலுவலகம்	-	இரண்டாவது மாடி செத்சிறிபாய, பத்தரமுல்லை இலங்கை தொலைபேசி 94 11 2862588 தொலைநகல். 94 11 2864771 மின்னஞ்சல். **dgb@buildingsdept.gov.lk** இணையம். www.buildingsdept.gov.lk



உரு 1 : கட்டிடங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலக அமைவிடம்

வலய அலுவலகங்கள்

வலயம்	முகவரி
வலயம் 1 (மேற்கு – தெற்கு)	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 1), கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் எவன்யூ, கொழும்பு 07
வலயம் 1 (மேற்கு – வடக்கு)	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 1), கட்டிடங்கள் திணைக்களம், இல. 213, டொரிங்டன் எவன்யூ, கொழும்பு 07
வலயம் 2	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 2), கட்டிடங்கள் திணைக்களம், கடலோர வீதி, குருநகர், யாழ்ப்பாணம்
வலயம் 3	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 3), கட்டிடங்கள் திணைக்களம், வெலிகொடவீதி, குருணாகல்.
வலயம் 4	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 4), கட்டிடங்கள் திணைக்களம், பிரதேச செயலகம்-மன்முனை வடக்கு, மட்டக்களப்பு.
வலயம் 5	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 5), கட்டிடங்கள் திணைக்களம், த.பெ.இல. 113, கண்டி.
வலயம் 6	பிரதம பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 6), கட்டிடங்கள் திணைக்களம், இல.10, மேல் டிக்சன் வீதி, காலி.

MAP OF ZONAL OFFICES



உரு 2: வலய வரைபடம்

நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் பொது கட்டிடங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கு பொறுப்பான முன்னோடி அரசாங்க அமைப்பாக 5 தசாப்தங்களாக கட்டிடத் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. இந்த திணைக்களம் இப்போது மாறிவரும் பொருளாதார மற்றும் தொழில்நுட்பச் சூழலில் தொழில்முனைவு மற்றும் புத்தாக்க நிறுவனமாக மாற்றமடைந்துள்ளது. திணைக்களம் அதன் வகிபாகம் மற்றும் செயற்பணி கூற்றை மீள வரையறை செய்யத் தொடங்கியுள்ளதுடன் இப்போது செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பொறுப்புக்கூறல் அம்சங்களில் ஒரு குறித்துரைத்த தொடர்பைக் கொண்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட செயலற்றலுக்கான அளவுகோல்களை அமைக்கவும், பணியாளர்களை அளவிட்டு கண்காணித்துக் கட்டுப்படுத்தவும், இணக்கப்பாட்டை வெளிப்படுத்தவும், வெளிவாரி அறிக்கைகளை உருவாக்கவும், செயலாற்றலை கற்றுக் கொண்டு மேம்படுத்தவும் பொறியியலாளர்கள், துணை அதிகாரிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடையே தகவல்தொடர்புகளை மேம்படுத்தவும் இந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் செயலாற்றல் பாராட்டத்தக்க அளவில் உள்ளதுடன் திணைக்களத்தால் கையாளப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் இந்த அறிக்கையில் பொழிப்பாக்கப்பட்டுள்ளன. மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவினங்களின் பொழிப்பை இதனையொத்த ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது வெளியீட்டுக் கிரயம் குறைந்ததாகவும் வினைத்திறமையாகவும் இருந்ததுள்ளது என்பதை காணமுடிகின்றது.

செயலாற்றல் மற்றும் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட இலக்குக்கு எதிரான செயல் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டதாக வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் காணப்படுகின்றது. கிடைக்கக்கூடிய வளங்களை உத்தமமாகப் பயன்படுத்தி திணைக்களத்தில் உள்ள பல்வேறுபட்ட தொழில்முறை ஊழியர்கள், தொழில்சார் சேவைகளை வழங்குகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அதிகபட்ச செயல்திறனுடன் அடைவதற்காக திணைக்களம் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. திணைக்களத்தின் ஊழியர்களுக்கு வெளிவாரியாகவும் உள்வாரியாகவும் வெவ்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துவதன் %லம் இயலளவு அபிவிருத்தி வசதிகள் வழங்கப்பட்டன. வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய நிர்வாக, நிதி மற்றும் இதர பணிகளின் கணக்காய்வை உள்ளக கணக்காய்வு பிரிவு மேற்கொண்டது.

ஆழமாக, தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திணைக்களத்தின் செயல்பாடுகளை மீள வடிவமைப்பதற்காக திணைக்களம் மீதான ஆய்வு அவசியமாக இருப்பதுடன் எதிர்காலத்தில் அரசுடன் தொடர்புடைய அனைத்து செயற்திட்டங்களையும் பொறுப்பேற்கும் இலக்கை அடைவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

தூரநோக்கு

பொதுத்துறை நிறுவனங்கள் பாதுகாப்பான, சிக்கனமான, நிலைபேறான, நேர்த்தியான, கட்டமைக்கப்பட்ட சுற்றாடலில் நாட்டுக்கு உயர் தரமான சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக கட்டிட வேலைகளில் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்.

செயற்பணி

அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் குழுவின் மூலம் கட்டிடக்கலை வடிவமைப்பு, பொறியியல் வடிவமைப்பு, நிர்மாணம், பராமரிப்பு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் ஊடாக ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு தரம், சிக்கனம், செயல்பாட்டுடைய மற்றும் முழுமையான திருப்திக்கான தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்து தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் பொதுத்துறையின் கட்டிட வேலைகளை மேம்படுத்துவதற்கு மிகச்சிறந்த சேவைகளை வழங்குதல்.

குறிக்கோள்கள்

பொதுத்துறை கட்டிட வேலைகளின் அபிவிருத்திக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மிகச்சிறந்த சேவைகளை வழங்கும் முன்னோடி அரசாங்க அமைப்பாக திணைக்களம் காணப்படுகின்றது.

- எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் தொழில்முறை சேவைகள் மூலம் வாடிக்கையாளர்களை மகிழ்வித்தல்.
- சிறந்த கட்டமைக்கப்பட்ட சூழலை அடைவதற்கு சட்டரீதியான, ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் தொடர்புடைய நியமங்களை கடைபிடித்தல்.
- கண்காணிப்பு, வாடிக்கையாளர் கருத்து மற்றும் அறிவைப் புதுப்பித்தல் மூலம் எங்கள் சேவைகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்.
- குழுப்பணி மூலம் எங்கள் அர்ப்பணிப்புள்ள பல்துறை நிபுணர்களின் ஒட்டுமொத்த பங்கேற்பை உறுதிசெய்தல்.

திணைக்களத்தின் உத்தரவாதம்

வாடிக்கையாளரின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் திறன்களைக் கருத்தில் கொண்டு திணைக்களமானது செயல்திறன்மிக்க மற்றும் தடயவியல் உதவிகளை வழங்குகின்றது. கட்டுமானங்களுக்கான **உத்தரவாதத்தின்** தேவையை நாங்கள் **மதிப்பதுடன் இடரை நடுநிலையாக்குவதற்கு** பின்வருமாறு பொறுப்பேற்கின்றோம் :

அ. ஆயுட்கால தொழில்நுட்ப ரீதியான / நிதி ரீதியான வகைகூறல்
ஆ. மிகவும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிபுணரால் முழுமையான கட்டிடத் தேவைக்கான வடிவமைப்புகள்
இ. அனைத்து விதிகள், பிரமாணங்கள், தரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களை கடைபிடித்தல்
ஈ. கடந்த கால அனுபவத்தைப் பயன்படுத்தி சிறப்பாக உருவாக்கப்பட்ட மிகவும் துல்லியமான நோக்கெல்லை
உ. ஏனைய சேவை வழங்குநர்களின் தரம், பாதுகாப்பை ஆய்வு செய்தல், ஒத்துப்போகும் வடிவமைப்புகள், ஆவணம் மூலம் உறுதிப்படுத்துதல்
ஊ. ஒப்பந்தங்களை நிர்வகித்தல்
எ. அனுபவம் வாய்ந்த தொழில்சார் செயற்திட்ட முகாமைத்துவ சேவையின் விழுமியத்தை உறுதிப்படுத்துதல்
ஏ. முகாமைத்துவ கணக்காய்வு சிக்கல்களில் உதவிசெய்தல்
ஐ. ஒப்பந்த வழக்குகளில் உதவிசெய்தல்
ஒ. நியம தொழில்நுட்ப மதிப்பீட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டு மற்றும் பெறுகைக் குழுக்களில் பங்கேற்பதன் மூலம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
ஓ. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரித்தலுக்கான **கட்டிட வீதங்களின் பட்டோலையை (BSR) தயாரித்து வெளியிடுதல்.**

முகாமைத்துவ படிநிலை

பணிப்பாளர் நாயகம்	பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி
மேலதிக பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவை)	பொறி. (திருமதி). ஜி.எச்.ஹிரிமுத்துகொட
மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆலோசனை சேவை)	கட்டிடக்கலை. (திரு) மேனக மங்களானந்த
பணிப்பாளர் (நிர்மாண வலயம் I)	பொறி. (திரு) ஏ.எம். விக்ரமசிங்ஹ
பணிப்பாளர் (நிர்மாண வலயம் II)	பொறி. (திரு) ஜீ.ஆர்.எஸ்.பி. கம்லத்
பணிப்பாளர் (நிர்மாண வலயம் III)	பொறி. (திரு) எஸ்.எஸ்.ரண்வத்த
பணிப்பாளர் (பெறுகை மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி)	பொறி. (திரு) எச்.ஆர்.எம். பண்டார
பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு)	பொறி. (திரு) ஜீ.எச்.ஏ.பீ. சஜோத
பணிப்பாளர் (மின்னியல் மற்றும் இயந்திரவியல்)	பொறி. (திருமதி) ஈ.டி.எம்.எஸ்.குணரத்ன
பணிப்பாளர் (நிர்வாகம்)	திருமதி. எஸ்.டி.டி.பி. சிங்கபுர
பிரதம கணக்காளர்	திருமதி. ஜீ.வீ.ஏ. சஜீவனி
பிரதம உள்ளக கணக்காளர்	திரு. கே.ஜி.பி பிரியந்த
பணிப்பாளர் (கட்டிடக்கலை)	கட்டிடக்கலை. (திருமதி.) ஆர்.எ.ரி.எஸ். ரணதுங்க

வழங்கப்பட்ட சேவைகள்

திணைக்களமானது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சேவைகளை வழங்குவதுடன் அவர்களின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அவர்களின் கட்டிடங்கள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் அவர்கள் எதிர்கொள்ளும் இயலளவு இடைவெளியை குறைப்பதற்கு உதவுகின்றது.

செயற்திட்ட பிரேரணைகள் (வாடிக்கையாள் செயற்திட்டங்களை அடையாளம் காண்பதற்கு உதவும் வகிபாகம்)

செயற்திட்டச் சுருக்கங்கள், சாத்தியக்கூறு அறிக்கைகள், கிரய மதிப்பீடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செயற்திட்ட அனுமதிகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் பெற்றுக் கொள்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை நாங்கள் தயார் செய்கின்றோம்.

ஆயத்த தயாரிப்பு (தொழில்முனைவு செயற்திட்ட முகாமை வகிபாகமாக இருத்தல்)

வடிவமைப்பிலிருந்து பூரணப்படுத்தி கையேற்றல் வரையிலுமான முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளர் எல்லா தொழிற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அனுமதியை மாத்திரம் வழங்குதல் வேண்டும்.

கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வாக்குப் பணமாக அல்லது காசோலையாக நிதிகள் மாற்றப்படுவதன் மூலம்: நிதிப்பிரமாணத்தில் கூறப்பட்டவாறு நிதிகள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனை (செயற்திட்ட அமுலாக்கல் முகாமையாளரின் வகிபாகம்)
நாங்கள் சாத்தியக்கூறு ஆய்வு, வடிவமைப்பு அபிவிருத்தி, அளவுத்திட்ட சிட்டைகள் மற்றும் கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் போன்ற ஒப்பந்தத்திற்கு முன்னைய பொறுப்புக்களையும், கட்டுமான முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் போன்ற ஒப்பந்தத்திற்குப் பிந்திய பொறுப்புக்களையும் நாங்கள் மேற்கொள்கிறோம். கேள்விப்பத்திர செயல்முறை பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வர்.

வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

செயற்திட்ட முகாமைத்துவம் (செயற்திட்ட அமுல்படுத்துனராக / முகாமையாளராக இருத்தல்)

ஆலோசனை வழங்குகின்ற மற்றும் நிர்மாணித்தலில் ஈடுபடுகின்ற முகவர்களை நிர்வகிக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்குவதனை அல்லது அமுலாக்கலை நாங்கள் மேற்கொள்வோம். நாங்கள் தனியார் துறை முதலீட்டுத் திட்டங்களான BOT, BOOT, வடிவமைத்தல் மற்றும் அரசாங்க அல்லது மானியம் வழங்கும் முகவர் மூலமான ஒப்பந்தங்களை கையேற்கின்றோம்.

வாடிக்கையாளரிடம் நிதி தக்கவைக்கப்பட்டு, வாடிக்கையாளர் கட்டுமானப் பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துவர்.

பராமரிப்பு, சிறப்பு பழுதுபார்ப்பு, மேம்பாடுகள்(வாடிக்கையாளருக்கு வசதியளித்தல் வகிபாகமாக காணப்படும்)

நிபந்தனை அறிக்கைகள், பராமரிப்பு கையேடுகள், பராமரிப்பு மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பராமரிப்பு செயல்படுத்தல்கள், கட்டிட மறுசீரமைப்புகள், உள்கட்டமைப்பு ஆகியவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

பணிகளை மேற்கொள்வதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு நிதி விடுவிக்கப்படும்

வழங்கப்பட்ட ஏனைய சேவைகள்

திறமையான அதிகாரிகளை உறுப்பினர்களாக நியமிப்பதன் மூலம் ஏனைய நிறுவனங்களின் கொள்வனவுக் குழுக்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், துணைக் குழுக்கள் மற்றும் பிற தொடர்புடைய குழுக்களில் நாங்கள் பங்கேற்கின்றோம்.

பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை

தேசிய அபிவிருத்திக்கு பங்களித்தல்

இந்தத் திணைக்களமானது கட்டிடத் துறையில் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. நாடளாவிய நிர்மாணத் திட்டங்களுக்கு அதிகளவு செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை திணைக்களத்தினால் வழங்க முடிந்திருந்தது.

செயல் முன்னேற்றப் பொழிப்பு

2023 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட மதிப்பீட்டுக்கு எதிரான நிதி செயல் முன்னேற்றத்தின் ஒட்டுமொத்த சதவீதம் 86.47% ஆகும்.

2023 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட தடைகள்

- பணியாளர்கள் பற்றாக்குறை
    - பொறியியலாளர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள்
    - தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் வரைவு நபர்கள்
    - தொழில்நுட்ப உதவியாளர்
    - பொது முகாமைத்துவ உதவியாளர்கள்
    - சாரதிகள்
- வசதிகள் மற்றும் சலுகைகள் இல்லாததால் அரசுத் துறையில் அதிகாரிகளைத் தக்கவைப்பதில் சிரமம்: அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான சம்பளமற்ற விடுமுறை சுற்றறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டமை.
- தளத்தைப் பார்வையிடுவதற்கு வாகனங்கள் பற்றாக்குறை.
- அவசர திட்டங்களுக்கு பணி நியமனத்தின் அடிப்படையில் ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கு ஒப்புதல்கள் இல்லாமை.
- சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு / மேம்பாட்டிற்கு போதுமான ஒதுக்கீடுகள் இல்லாமை.
- இடைநிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு பணம் செலுத்தாமை (வடிவமைப்புகளை முடித்த பிறகு)
- கட்டுமான கட்டத்தில் வாடிக்கையாளர்களால் கோரப்பட்ட மாற்றங்களால் திட்டங்களில் தாமதம்.
- ஒப்பந்ததாரர்களின் வளங்கள் பற்றாக்குறை மற்றும் நிதி மற்றும் பொருள் பற்றாக்குறை காரணமாக திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதில் சிரமம்.
- வாடிக்கையாளரால் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் மற்றும் உள்ளூர் அரசாங்க அனுமதிகளைப் பெறுவதில் தாமதம்

துடைகளை அகற்றுவதற்கான உத்திகள்

- திணைக்களத்தில் 135 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் (பக்கம் 39) அந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரத்தரப்பின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- பதிற்கடமை மற்றும் பதில் வேலைபார்ப்பு அடிப்படையில் தற்போதுள்ள பதவியணியனரைக் கொண்டு கடமைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொறியியலாளர்: கே.ஜீ.எஸ். குமுதினி
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்

1.3 பிரதான செயற்பாடுகள்

திணைக்களமானது நிதிப்பிரமாணங்கள் 787, 788, 789 மற்றும் 790 ஆகியவற்றின் கீழ் அதிகாரம் பெற்றுள்ளது. அதன்படி, திணைக்களமானது தொழில்நுட்பம் அல்லாத துறைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பின்வரும் பொறுப்புகளை கையேற்கின்றது.

திணைக்களமானது எமது அர்ப்பணிப்பிற்கு மிகவும் கட்டுப்படும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த வடிவில் உடன்படிக்கையுடன் சேவைகளை வழங்குகிறது.

திணைக்களத்தின் பிரதான செயல்பாடுகள் பின்வருமாறு

1. அரசாங்க அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்களின் வாக்குப்பணப் பேரேட்டுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் கட்டிடங்கள் மற்றும் தொடர்புடைய வசதிகளின் திட்டமிடல், வடிவமைப்பு, மதிப்பீடு மற்றும் நிர்மாணம்.
2. கட்டிட வேலைகளில் பிராந்திய நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்.
3. அரசு கட்டிடங்களில் பராமரிப்பு, சேர்த்தல் மற்றும் மேம்பாடு
4. அரசு குடியிருப்புகள் மற்றும் விடுதிகளில் சேர்த்தல், மேம்படுத்துதல், பராமரித்தல்.
5. திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டிட வேலைகளுக்கும் தொழில்நுட்ப பொறுப்புணர்வை உறுதி செய்தல் .
6. 2018.05.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு உரிமைச் சட்டத்தின் (சிறப்பு விதிகள்) படி புலமைச் சொத்துக் கட்டிடங்களுக்கான சான்றிதழ் வழங்குதல்
7. ஏனைய நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
08. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களின் இளங்கலை மற்றும் மாணவர்களுக்கு உள்ளக பயிற்சி வசதிகளை வழங்குதல்.
09. அரசாங்க நிறுவனங்களின் உள்ளக மற்றும் வெளியகத் திணைக்களங்களிடமிருந்து சிவில் பொறியியலாளர்களுக்கு பட்டயப் பொறியியலாளர் தகைமையை பெற்றுக் கொள்வதற்காக வடிவமைப்பு அலுவலக பயிற்சி வசதிகளை வழங்குதல்.
10. கட்டுமானம் மற்றும் கட்டிட பராமரிப்பு வீதப் பட்டோலைகளைத் (BSR) தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல்
11. UDA இன் பொது ஒழுங்குமுறையின்படி கட்டிட நிலை அறிக்கைச் சான்றிதழை வழங்குதல்.

1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்







4. நிர்வாகப் பிரிவு
5. நிதிப் பிரிவு
6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1.4 அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபையின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்

- பொருத்தமற்றது –

அத்தியாயம் 02 - செயல் முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 2023 வரையிலான கடந்தகாலச் செயலாற்றல்

நிறுவனத்தின் தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி/நிர்வாக அதிகாரி கையெழுத்திடுவதற்காக குறிப்பிடப்பட வேண்டிய சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்களின் சுருக்கமான விளக்கம்.



உரு 3: கடந்த பத்து ஆண்டுகளுடனான ஒப்பீடு

கட்டிடங்கள் திணைக்களமானது தனது வாடிக்கையாளர்களான ஏனைய அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குகிறது. திணைக்களம் வழங்கும் முக்கிய சேவைகளை புதிய கட்டிடங்கள், உள்கட்டமைப்பு கட்டுமானங்கள் மற்றும் புனரமைப்புகள் என வகைப்படுத்தலாம். அட்டவணை 1 மற்றும் உரு 3 இல் காட்டப்பட்டுள்ளபடி திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,523.01 மில்லியனாக காணப்பட்ட அதன் செயலாற்றலை 2023 ஆம் ஆண்டில் ரூபா 1614.42 மில்லியன் ஆக அதிகரித்திருந்தது. வாடிக்கையாளருக்கு கட்டுநிதி ஒதுக்கீடு கிடைக்காமை, ஒப்பந்தக்காரரின் நிதி நெருக்கடி மற்றும் விலை அதிகரிப்பு (இறக்குமதி தடை மற்றும் அரசாங்க விதிமுறைகள்) காரணமாக 2022 முதல் 2023 வரையான செயலாற்றல் 26% குறைந்துள்ளது. அத்துடன், ஏனைய நிறுவனங்களின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்கான மதிப்பீடுகளை கட்டிடங்கள் திணைக்களம் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இதன்படி, 2023 ஆம் ஆண்டிற்காக சுமார் ரூபா 21,830.72 மில்லியன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்படாததுடன் அனுமதி கிடைத்த பின்னர் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். (அட்டவணை 4 ஐப் பார்க்கவும்). மேலும், அரசாங்கத்தின் தற்போதைய கட்டிடங்கள் தொடர்பான பிரச்சனைகளில் முடிவெடுக்கத் தேவையான 72 தொழில்நுட்ப அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1 : 2014-2023 ஆண்டிலிருந்து வருடாந்த அதிகரிப்பு

ஆண்டு	வருடாந்த செயலாற்றல் (மில்லியன்)	அதிகரிப்பு சதவீதம் (2014 இன் அடிப்படை)	அதிகரிப்பு சதவீதம் (முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு)
2014	1523.01		
2015	2303.81	51	51
2016	3917.38	157	70
2017	5262.40	246	34
2018	5333.35	250	1
2019	4811.48	216	-10
2020	1950.69	28	-59
2021	2911.67	91	49
2022	2176.04	43	-25
2023	1614.42	6	-26



உரு 4: செயலாற்றல் அதிகரிப்பு

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளபடி, 2022 முதல் 2023 வரையிலான காலத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் ரூபா 2,176.04 மில்லியனில் இருந்து ரூபா 1,614.42 மில்லியனாக குறைத்துள்ளது. கீழே உள்ள அட்டவணை 2 ஆனது புனரமைப்பு மற்றும் புதிய கட்டிடங்களின் செயலாற்றலைக் காட்டுகின்றது. 2022 முதல் 2023 வரை புதிய கட்டிடங்களின் செயலாற்றல் 26% இனாலும் புனரமைப்பு திட்டங்களின் செயலாற்றல் 1% இனாலும் குறைவடைந்துள்ளது. வாடிக்கையாளரிடமிருந்து கட்டுநிதி /ஒதுக்கீடு கிடைக்காமை, ஒப்பந்தக்காரரின் நிதி நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு (இறக்குமதி தடை, அரசாங்க விதிமுறைகள்) காரணமாக மொத்த செயல் முன்னேற்றம் குறைந்துள்ளது.

அட்டவணை 2: பிரிவுகளின் வருடாந்த செயலாற்றல் ஒப்பீடு

பிரிவுகள்	வருடாந்த செயலாற்றல் (மில்.)		% அதிகரிப்பு (முன்னைய ஆண்டின் அடிப்படையில்)
	2022	2023	
புனரமைப்பு	59.92	59.27	-1%
புதிய கட்டிடங்கள்	2116.12	1555.15	-26%
மொத்தம்	**2176.04**	**1614.42**	**-26%**

2.2 2023 இல் செயற்திட்டங்களின் பொழிப்பு



உரு 5 : நிர்மாணச் செயலாற்றலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுதல்.

திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் 119 செயற்திட்டங்களைக் கையாண்டதுடன், அவற்றில் 76 செயற்திட்டங்கள் 25 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும், 24 செயற்திட்டங்கள் 25 மில்லியன் முதல் 100 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும், 7 திட்டங்கள் 100 மில்லியன் முதல் 200 மில்லியன் வரையிலான திட்ட மதிப்பைக் கொண்டவையாகவும் காணப்பட்டதுடன் மேலும் 12 செயற்திட்டங்கள் 200 மில்லியன் மதிப்பிற்கு மேற்பட்டவையாக காணப்பட்டன. விபரம் அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3 : 2023 ஆம் ஆண்டில் கட்டுமானப் பிரிவு செயற்திட்டங்களின் சுருக்கம்

வலய அலுவலகம்	செயற்திட்ட பெறுமதி ரூபா (மில்.)				
	0-25	25-100	100-200	>200	Total
வலயம் - மேற்கு – தெற்கு	06	03	02	03	**14**
வலயம் மேற்கு – வடக்கு	07	03	00	03	**13**
வலயம் 2	11	01	00	00	**12**
வலயம் 3	10	04	04	00	**18**
வலயம் 4	27	04	00	01	**32**
வலயம் 5	06	02	00	04	**12**
வலயம் 6	09	07	01	01	**18**
மொத்தம்	76	24	07	12	**119**

அட்டவணை 4 : 2023 இல் வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் மீது சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்

திணைக்கள வலய அலுவலகம்	2023 இல் சமர்ப்பித்த மதிப்பீடுகளின் எண்ணிக்கை	மதிப்பீடுகளின் பெறுமதி (மில்.)
வலயம் - மேற்கு – தெற்கு	66	2,420.64
வலயம் மேற்கு – வடக்கு	57	1,080.47
வலயம் 2	50	2,962.70
வலயம் 3	39	2,249.50
வலயம் 4	63	3,200.44
வலயம் 5	61	3,344.22
வலயம் 6	38	3,067.75
அரசாங்க வைத்தியசாலைகளில் சூரிய மின்வலு தகடுகளை பொருத்துதல்	46	3,505.00
மொத்தம்	**420**	**21,830.72**

2.3 மதியுரைப் பிரிவின் செயலாற்றல்

மதியுரை பிரிவு என்பது திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளின் மையமாகும். கட்டிடங்கள், தொடர்புடைய உட்கட்டமைப்புகள் மற்றும் அளவுத்திட்ட பட்டியல்கள் தொடர்பான கட்டிடக்கலை, கட்டமைப்பு, மின்சாரம், நீர் வழங்கல், வடிகால் மற்றும் இயந்திர வடிவமைப்பு போன்ற வடிவங்களில் வடிவமைப்புச் சேவைகளை இந்த பிரிவு வழங்குகின்றது. மேலே உள்ள சேவைகள் அர்ப்பணிப்புள்ள தொழில்முறை கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்களால் வழங்கப்படுகின்றன. 2019 முதல் 2023 ஆண்டு வரையிலான செயலாற்றலை அட்டவணை 5 காட்டுகின்றது.

அட்டவணை 5(அ): 2023 இல் கட்டிடக்கலை பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

		2019	2020	2021	2022	2023
வரைபட வடிவமைப்பு	இலக்கு	75	57	67	19	38
	முன்னேற்றம்	67	50	61	18	34
விரிவான வடிவமைப்பு	இலக்கு	48	23	55	21	14
	முன்னேற்றம்	43	12	40	14	12

அட்டவணை 5(ஆ): 2023 இல் செயற்திட்ட கட்டமைப்பு பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

விரிவான வடிவமைப்பு	இலக்கு	51	36	40	19	28
	முன்னேற்றம்	66	09	42	14	12

அட்டவணை 5(இ): 2023 இல் நீர்வழங்கல் மற்றும் கழிவகற்றல் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

விரிவான வடிவமைப்பு	இலக்கு	58	25	56	21	20
	முன்னேற்றம்	45	17	52	18	14

அட்டவணை 5(ஈ): 2023 இல் மின்னியல் செயற்திட்டப் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

விரிவான வடிவமைப்பு	இலக்கு	62	26	64	21	17
	முன்னேற்றம்	60	24	63	21	17

அட்டவணை 5(உ): 2023 இல் இயந்திர செயற்திட்டப் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

விரிவான வடிவமைப்பு	இலக்கு	26	25	61	24	13
	முன்னேற்றம்	26	25	61	24	13

அட்டவணை 5(ஊ): 2023 இல் செயற்திட்ட மதிப்பீட்டுப் பிரிவின் செயலாற்றல் பொழிப்பு

கனிய அளவீடு தயாரித்தல்	இலக்கு	38	20	26	13	7
	முன்னேற்றம்	26	8	29	10	4

2.4 புலமைச்சொத்து செயற்திட்டங்களின் சான்றிதழ்

2018.05.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுக்குமாடி உரிமைச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) படி, புலமைச் சொத்துக் குடியிருப்பு பாதுகாப்பிற்கான கட்டிடச் சான்றிதழை வழங்குவதற்காக வீட்டு அலகுகளை திணைக்களம் ஆய்வு செய்தது. அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளபடி ஹபராதுவ, அக்மீமன, மொரட்டுவ (குட்வில் வத்த) மற்றும் மாதம்மகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 2023 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் (NHDA) நிர்மாணிக்கப்பட்ட மொத்தம் 720 வீடுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அட்டவணை 6: புலமைச்சொத்து செயற்திட்டங்கள்- வீட்டு அலகுகள்

	2022/12/31 வரை	**2023 ஆம் ஆண்டில்**	**மொத்தம்**
NHDA	1038	599	1637
SLLRDC	144	-	144
மாநகர சபை – கண்டி	32	-	32
பி.செ. ஹபராதுவ	-	37	37
பி.செ. அக்மீமன	-	36	36
பி.செ. மொரட்டுவ (குட்வில்வத்த)	-	24	24
பி.செ. மாதம்பகம	-	24	24

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடல் அடிப்படை

1. அறிக்கையிடல் காலப்பகுதி

இந்த நிதிக்கூற்றுக்களிற்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டாகும்.

2. அளவிடலுக்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயங்கள் மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கு சீராக்கப்பட்டுள்ளன. வேறுவகையில் குறிப்பிடப்படாதவிடத்து கணக்குகள் மேம்படுத்திய காசு முறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய தொகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. வருமானங்களை இனங்காணல்

கைமாறுகின்ற மற்றும் கைமாற்றமற்ற வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலஎல்லை கருத்திலெடுக்கப்படாது, காசு கிடைக்கும் காலத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்கண்டு அளவிடுதல்

சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாக காணப்பட்டு, அச்சொத்துக்களை நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுவதுடன் கிரய வடிவம் சம்பந்தப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களில் மீள விலைமதிக்கப்பட்ட பெறுமதிகள் பிரயோகிக்கப்படுகின்றன.

5. ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டுக் கணக்காகும்.

6. காசும் காசுக்கு சமமானவைகளும்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள பண நோட்டுக்களும் குற்றி நாணயங்களும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ளடங்கியுள்ளன.

- ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில், அரச கணக்குகள் திணைக்களத்தின் ஒப்புதலுடன் தொடர்புடைய தகவல்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கலாம் என்பதுடன் இந்த குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களிற்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் "அறிக்கையிடல் அடிப்படை"யின் கீழ் சேர்க்கப்படலாம். .
- அறிக்கையிடல் நிறுவனத்துடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மட்டுமே அறிக்கையிடலுக்கான அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

3.5 வருவாய் சேகரிப்பின் செயலாற்றல்

ரூபா .....

வருமான குறியீடு	வருமான குறியீட்டு விபரம	வருவாய் மதிப்பீடு		வசூலித்த வருவாய்	
		அசல்	இறுதி	தொகை (ரூ.)	இறுதி வருவாய் மதிப்பீட்டின் சதவீதமாக
	பொருந்தாது				

3.6 ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதன் செயலாற்றல்

ஒதுக்கீட்டின் வகை	மூலதனம்		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக பயன்பாடு
	மூலமதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும்	536,000,000.00	541,154,000.00	517,252,554.00	96%
மூலதனம்	17,700,000.00	17,700,000.00	17,643,337.00	100%

3.6அ நி.பி. 208 இன் அடிப்படையில் இந்த திணைக்களம் /மாவட்டச் செயலகம்/ மாகாண சபை/ ஏனைய அமைச்சகங்கள் /திணைக்களங்களின் முகவராகச் செலவழிப்பதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

இல.	திணைக்களம் /அமைச்சு	திட்ட எண்ணிக்கை	2023 இல் கிடைத்த நிதி	2023.12.31 வரை செலவினம்	மீதி	செயல் முன்னேற்றம் (%)
1	புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு	01	6,340,616.75	6340,616.75	-	100.00
2	பாதுகாப்பு அமைச்சகம்	03	1,445,793.67	1,445,793.67	-	100.00
3	சுகாதார அமைச்சகம்	19	164,467,773.21	164,467,773.21	-	100.00
4	நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டுவசதி அமைச்சகம்	01	722,787.20	722,787.20	-	100.00
5	பொது பாதுகாப்பு அமைச்சகம்	03	76,324,253.91	76,324,253.91	-	100.00
6	வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சகம்	02	1,525,000.00	1,525,000.00	-	100.00
7	தேசிய அருங்காட்சியகத் திணைக்களம்	03	51,044,554.98	51,044,554.98	-	100.00
8	ஆயுர்வேத திணைக்களம்	01	1,300,358.26	1,300,358.26	-	100.00
9	தொழிலாளர் திணைக்களம்	03	8,293,558.98	8,293,558.98	-	100.00
10	பொலிஸ் திணைக்களம்	28	281,259,516.81	281,259,516.81	-	100.00
11	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	02	7,285,460.30	7,285,460.30		100.00
12	மதுவரித் திணைக்களம்	01	21,000,000.00	21,000,000.00	-	100.00
13	மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம்	02	2,022,114.12	2,022,114.12	-	100.00
14	மதிப்பீட்டுத் திணைக்களம்	01	786,500.00	786,500.00	-	100.00
15	ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்	01	680,989.36	680,989.36	-	100.00
16	தபால் திணைக்களம்	02	7,040,715.00	7,040,715.00	-	100.00
17	தேர்தல் ஆணையம்	01	7,241,215.00	7,241,215.00	-	100.00
18	இலங்கை சுங்க திணைக்களம்	02	3,951,995.95	3,951,995.95	-	100.00
19	விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகம்	01	1,311,730.09	1,311,730.09	-	100.00
மொத்தம்		**77**	**644,044,933.59**	**644,044,933.59**	-	

3.7 நிதியல்லாத சொத்துகளின் அறிக்கையிடல் செயலாற்றல்

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	2023.12.31 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி மீதி (ரூபா)	2023.12.31 இன் நிதி நிலைமைக் கூற்றின் படி மீதி(ரூபா)	இதுவரை கணக்கீடு செய்யப்படாதவை	அறிக்கையிடப்பட்டவைகளின் செயல் முன்னேற்ற சதவீதம்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	112,302,689.29	112,302,689.29	-	100
9152	இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	271,515,239.10	271,515,239.10	-	100
9153	காணிகள்	461,398,355.60	461,398,355.60	-	100
9154	அருவச் சொத்துக்கள்	3,979,368.00	3,979,368.00	-	100
